## பள்ளிக் கல்வித் துறை

# மகிழ் முற்றம்

மாற்றத்தை நோக்கிய பயணம்

## கையேடு

தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் மகிழ் முற்றம் சார்ந்து அமைக்கப்படும் குழுக்களை மேற்பார்வை செய்து, ஒழுங்கமைத்து வழிகாட்ட இந்தக் கையேடு உதவும்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 1 |
| மகிழ் முற்றம் நோக்கங்கள் | 3 |
| செயல்கள் | |
| செயல் 1 | 6 |
| செயல் 2 | 7 |
| செயல் 3 | 9 |
| செயல் 4 | 14 |
| செயல் 5 | 16 |
| செயல் 6 | 18 |
| முடிவுரை | 21 |
| இணைப்புகள் | 23 |

# முன்னுரை

மகிழ் முற்றம் குழு அமைப்பு (House System) என்பது நம் பள்ளிகளில் மாணவர்களின் கல்வி மற்றும் கல்வி சார் செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்கான ஓர் அமைப்பாகும். மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளுக்கு , தயார்படுத்தும் வகையில் பள்ளிகளில் மாணவர்களைக் குழுக்களாகப் (Houses) பிரித்து விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. இந்த நடைமுறையை மற்ற கற்றல் களங்களிலும் பின்பற்றி நமது மாநிலத்திலுள்ள பள்ளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் குழு அமைப்பு என்னும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

குழுக்களை அடையாளப்படுத்த ஒவ்வொரு குழுவுக்கும் தனிப் பெயர் மற்றும் வண்ணம் அளிக்கப்படும். மாணவர்களிடையே குழுப்பணி, சமூக மனப்பான்மை, ஒருவருக்கொருவர் ஆதரவு ஆகியவை இக்குழு அமைப்பின் முதன்மை நோக்கங்களாக உள்ளன. இந்தத் திட்டமானது விளையாட்டு நடவடிக்கைகளுக்கு அப்பால் சமூக உணர்வை ஊக்குவிப்பதற்கும், குழுப்பணியை வளர்ப்பதற்கும், தலைமைப்பண்புகளை ஊக்குவிப்பதற்கும் ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இக்குழு அமைப்பு மாணவர்களின் தலைமைத்துவம், பங்கேற்பு மற்றும் ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை ஊக்குவிக்கிறது.

தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள், இந்தக் குழுக்களை மேற்பார்வை செய்து, ஒழுங்கமைத்து வழிகாட்டுவதற்கு இந்தக் கையேட்டைப் பயன்படுத்தலாம். இந்தக் கையேட்டில் உங்கள் பள்ளிகளில் குழு அமைப்பை நிறுவுவதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் உள்ளன. மேலும் பள்ளிச் சூழலை மேம்படுத்தவும், குழு அமைப்பின் முக்கிய மதிப்புகளை மேம்படுத்தவும் இக்கையேடு உதவும். இந்தத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதற்கு ஆசிரியர்கள் முனைப்பாக செயல்பட வேண்டும்.





## சொற்களஞ்சியம்

1. HS - House System /குழு அமைப்பு
2. HM - Head Master/ தலைமையாசிரியர்
3. SHTC - School House Teacher Coordinator /குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்
4. HHT - House Head Teacher/ குழுப் பொறுப்பாசிரியர்
5. HC - House Captain/ குழுத் தலைவர்
6. HCL - House Class Leader/ வகுப்புக் குழுத் தலைவர்

# குழு அமைப்பின் நோக்கங்கள்



**1. கற்றல் திறன் மேம்பாடு**

வாசிப்பு இயக்க செயல்பாடுகள், வினாடி வினா மற்றும் தேர்வுகள் உள்ளிட்ட செயல்பாடுகளில் மாணவர்கள் திறனை அளவீடு செய்வதன் மூலம், அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துதல்.




**2. குழு மனப்பான்மை**

மாணவர்களிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து, தங்கள் குழுவின் வெற்றிக்காக செயல்படும் மனப்பான்மையை ஊக்குவித்தல்.



**3. அனைவருக்குமான வாய்ப்புகள்**

கல்வி மற்றும் இணைச் செயல்பாடுகளில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்வதன் மூலம், அவர்களின் திறமைகளை வெளிக்கொணர வாய்ப்புகளை உருவாக்குதல்.



### 4. நேர்மறை நடத்தைகளை வலுவூட்டுதல் (Positive reinforcement)

குழு அமைப்பின் மூலம் மாணவர்களிடையே நேர்மறை நடத்தைகளை வலுவூட்டி, அவர்தம் வாழ்வில் நீண்டகாலம் நிலைபெறச் செய்தல்.



### 5. தலைமைத்துவப் பண்பை வளர்த்தல்

ஒவ்வொரு குழுவிலும் மாணவர் தலைவர்களுக்கு தலைமைத்துவப் பண்புகளை வளர்த்து, பொறுப்பான தலைவர்களாக உருவாக வழிவகைச் செய்தல்.




### 6. ஆசிரியர்-மாணவர் உறவை மேம்படுத்துதல்

ஆசிரியர்கள் குழுக்களின் வழிகாட்டுநர்களாகச் செயல்படுவதால் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குகின்றனர். இதன் மூலம் ஆசிரியர் மாணவர் உறவை மேம்படுத்துதல்.

இந்த இலக்குகளை அடைவதன் மூலம், குழு அமைப்பானது முழுமையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கல்விச் சூழல் உருவாவதை உறுதி செய்கிறது. இது மாணவர்களிடையே கற்றல் திறன் மட்டுமல்லாது, சமூகத்தில் பொறுப்பான உறுப்பினர்களாக வளரத் தேவையான மதிப்புகள், திறன்கள் மற்றும் ஊக்கம் ஆகியவற்றையும் வளர்க்கிறது.

# மகிழ் முற்றம் குழு அமைப்பு



# மகிழ் முற்றம் - செயல்கள்

## செயல் 1

### சிறப்புக் கூட்டத்தைக் கூட்டுதல்



எந்தவொரு புதிய திட்டத்தையும் அறிமுகப்படுத்துவதற்கு முன்பு, ஆசிரியர்களுக்கு அதன் நோக்கத்தைத் தெளிவுபடுத்துவதும், அத்திட்டத்தைச் செயல்படுத்தும் முறைகளை விளக்குவதும் இன்றியமையாததாகும்.

**முக்கிய பணிகள்**

- தலைமையாசிரியர் பள்ளியில் ஆசிரியர்கள் கூட்டத்தைக் கூட்டுதல்.
- மகிழ் முற்றம் குழு அமைப்பு அறிமுகக் கூட்டத்தில் இத்திட்டத்தின் நோக்கம்,செயல்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்து ஆசிரியர்களுக்கு விளக்கம் அளித்தல்.
- பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் அனைவரும் குழு அமைப்பு குறித்த காணொலியைக் காண வழிவகை செய்ய வேண்டும்.

## செயல் 2


# மகிழ் முற்றம் குழுக்களுக்கான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல்



பள்ளியிலுள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள்.

**மாணவர்களுக்கான நெறிமுறைகள்**

- குழு அமைப்பு ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்புவரை உள்ள அனைத்து மாணவர்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படும்.
- மாணவர்கள் தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவில் 2 வருடம்வரை நீடிப்பர். அதற்குப் பிறகு மாணவரின் குழு (House System) இணையத்தளத்தின் வாயிலாக மாற்றம் செய்யப்படும்
- மாணவர்கள் வேறு பள்ளிக்கு மாறும்போது, அப்பள்ளியில் அவர்களுக்கான குழு இணையதளத்தின் வாயிலாக ஒதுக்கப்படும்.



**ஆசிரியர்களுக்கான நெறிமுறைகள்**

- மகிழ் முற்றம் மாணவர் குழு அமைப்பிற்கு ஆசிரியர் ஒருங்கிணைப்பாளராக ஓர் ஆசிரியரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- மகிழ் முற்றம் ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் ஐந்து குழுக்களுக்கும் சமமாக இணைந்து செயல்படுவார்.
- அனைத்து ஆசிரியர்களும் குலுக்கல் முறையில் ஐந்து குழுக்களில் ஏதேனும் ஒன்றில் இணைக்கப்படுவார்கள்.
- ஒவ்வொரு குழுவிலும் ஒன்றிற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இருப்பின், குழுப் பொறுப்பாசிரியரை கை உயர்த்துதல்/ குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- ஐந்துக்கும் குறைவான ஆசிரியர்கள் இருப்பின் ஓர் ஆசிரியரை ஒன்றுக்கும் மேற்பட்ட குழுக்களுக்கு குழுப் பொறுப்பாசிரியராக நியமிக்கலாம்.
- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, பள்ளியளவில் “மகிழ் முற்றம்” ஆசிரியர் கட்டமைப்பு மாற்றி அமைக்கப்படவேண்டும்
- ஆசிரியர்கள் வேறு பள்ளிக்கு மாறும்போது, அப்பள்ளியில் அவர்களுக்கான குழு தேவைக்கேற்ப தலைமைஆசிரியரால் ஒதுக்கப்படவேண்டும்.

குழுவிற்கான ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, இறுதிப் பெயர்ப் பட்டியல் குழு அமைப்பிற்கான ஆசிரிய ஒருங்கிணைப்பாளரிடம்(School House Teacher Coordinator) இருக்கவேண்டும்.

## செயல் 3

# குழுத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல்

குழுத் தலைவர்கள் மற்றும் குழுப் பொறுப்பாசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, கீழ்க்காணும் விவரங்களைக் கவனத்தில் கொள்ளவேண்டும்:




**குழுத் தலைவர் தேர்வுமுறை**

- முதலில், வகுப்பு வாரியாக வகுப்புக் குழுத் தலைவர்கள் (House Class Leaders) தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதன்பிறகு, பள்ளி அளவில் ஒவ்வொரு குழுவிற்கும் தலைவராக (House Captains) இரண்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

- பள்ளி அளவிலான குழுத் தலைவர்கள் மற்றும் வகுப்பு குழுத் தலைவர்கள் வெவ்வேறாக இருக்கவேண்டும்.

- பள்ளியின் உயர்வகுப்பில் பயிலும் மாணவர்களுள் இருவர், குழுத் தலைவர்களாக (House Captains) ஒவ்வொரு குழுவிற்கும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

- தொடக்கப்பள்ளிகளில் 5ஆம் வகுப்பிலிருந்தும், நடுநிலைப்பள்ளிகளில் 8ஆம் வகுப்பிலிருந்தும், உயர்நிலைப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பிலிருந்தும், மேல்நிலைப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பில் இருந்தும் குழுத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வோர் ஆண்டும், பள்ளியளவில் குழுத் தலைவர்கள் புதிதாக நியமிக்கப்படுதல் வேண்டும்.



- இருபாலர் பயிலும் பள்ளிகளில் ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி குழுத்தலைவர்களாக இருத்தல் வேண்டும்.

- குழுக்களில் மாற்றுத்திறன்/திருநர் மாணாக்கர்கள் இருந்தால், அவர்களுக்கு தலைவராக இருக்க முன்னுரிமை வழங்கலாம்.
- மேற்கண்ட நிகழ்வுகளில் பள்ளியில் ஆண், பெண் எண்ணிக்கையின் அடிப்படையில் எந்த பாலினருக்கான எண்ணிக்கை குறைவாக இருக்கின்றதோ, அந்தப் பாலினத்தைச் சேர்ந்தவரே இன்னொரு குழுத் தலைவராக அக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.


மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை குழுக்களாகப் பிரித்த பிறகு, வகுப்பு குழுத் தலைவர் (House Class Leader) மற்றும் பள்ளிக் குழுத் தலைவர்களைத் (House Captains) தேர்ந்தெடுத்தல்;
தேர்ந்தெடுக்கப்பட்ட வகுப்பு மற்றும் பள்ளி குழுத் தலைவர்களுக்குப் குழுப் பொறுப்பாசிரியர்கள் (House Head Teachers) ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் வழங்கவேண்டும்.

## வகுப்புக் குழுத் தலைவர்கள்

- ஒவ்வொரு வகுப்பிலும் மற்றும் வகுப்பிற்கான பிரிவிலும், ஒவ்வொரு குழுவிற்கான வகுப்புத் தலைவர் (House Class Leader) தெரிவுசெய்தல் வேண்டும்.

- வகுப்புக் குழுத் தலைவராக இருக்க விருப்பம் தெரிவிக்கும் மாணவர்களின் பெயர்களை துண்டுச் சீட்டுகளில் எழுதி மாணவர்களின் முன்னிலையில் குலுக்கல் முறையில் வகுப்பாசிரியர் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

- இருபாலர் பயிலும் பள்ளிகளில் மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில், குறைந்தது மூன்று குழுக்களுக்கான வகுப்புத் தலைவர்கள் மாணவிகளாக இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.




- வகுப்பில் மாற்றுத்திறன்/திருநர் மாணாக்கர் இருப்பின், ஒரு குழுவிற்கான வகுப்புத் தலைவராக அவர்களை நியமிக்கலாம்.

- ஒவ்வொரு மாதமும் குழுக்களுக்கான வகுப்பு தலைவர்கள் மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும்.

# மகிழ் முற்றம் குழு அமைப்பு - தலைவர்கள் தெரிவு முறை:

| பதவி | தலைவர்களின் எண்ணிக்கை | தகுதி | செயல்முறை | வழிநடத்துபவர் |
|---|---|---|---|---|
| குழுப் பொறுப்பாசிரியர் (House Head Teacher - HHT) | பள்ளி அளவில் ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பொறுப்பாசிரியர் என ஐந்து பொறுப்பாசிரியர்கள் இருப்பார்கள் | குறிப்பிட்டக் குழுவிலுள்ள அனைத்து ஆசிரியர்களும் | கை உயர்த்துவதன் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும். | குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் (SHTC ) |
| குழுத் தலைவர்கள் | ஒரு குழுவிற்கு இரண்டு பேர் வீதம் ஐந்து குழுக்களுக்குப் பள்ளி அளவில் மொத்தம் பத்துக் குழு தலைவர்கள் இருப்பார்கள் | குறிப்பிட்ட குழுவில் உள்ள உயர் வகுப்பில் பயிலும் மாணவர்கள் | ஒவ்வொரு குழுவிற்கும் தலைவராக இருக்க விருப்பம் தெரிவிக்கும் மாணவர்களின் பெயர்களைத் துண்டுச் சீட்டில் எழுதி அம்மாணவர்களின் முன்னிலையில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும். | பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஒவ்வொரு குழுவின் பொறுப்பாசிரியர் (HHT) |
| வகுப்புக் குழுத் தலைவர் (Class House Leader - HCL) | குழுவிற்கு ஒரு தலைவர் வீதம் ஒவ்வொரு வகுப்பு பிரிவிலும் ஐந்து குழு தலைவர்கள் இருப்பார்கள் | குறிப்பிட்ட வகுப்பு பிரிவில், அந்தக் குழுவிலுள்ள அனைத்து மாணவர்களும் | குழுவின் வகுப்புத் தலைவராக இருக்க விருப்பம் தெரிவிக்கும் மாணவர்களின் பெயர்களைத் துண்டுச் சீட்டில் எழுதி அம்மாணவர்களின் முன்னிலையில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும். | வகுப்பாசிரியர் |



பள்ளியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பெயர்களைக் குழு அமைப்பு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவேண்டும்.

## பள்ளி அளவிலான குழுத் தலைவர்களிடையே (House Captains) எதிர்பார்க்கப்படும் பண்புகள்

**தகவல் தொடர்பு திறன் (Communication Skills)**

தகவல் பரிமாற்றத்தில் தெளிவு மற்றும் தன்னம்பிக்கையை வெளிப்படுத்துதல்

**குழுப்பணி மற்றும் ஒத்துழைப்பு (Teamwork and Collaboration)**

மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றும் திறன் மற்றும் குழு உணர்வை வளர்த்தல்

**முரண்பாடுகளைக் களைதல்/ தீர்வு காணுதல் (Conflict Resolution)**

முரண்பாடுகளைக் களைவதற்கான உத்திகள் மற்றும் திறன்களைப் பெற்றிருத்தல்

**முன்னெடுப்பு மற்றும் படைப்பாற்றல் (Initiative and Creativity)**

ஆக்கப்பூர்வ கருத்துகள் மற்றும் முன்னெடுப்புக்கான அணுகுமுறை

**அர்ப்பணிப்பு மற்றும் தொலைநோக்குப் பார்வை (Commitment and Vision)**

பணிகளுக்கான ஆர்வமும் தெளிவான இலக்குகளை அடைவதற்கான வழிமுறைகளையும் தெரிந்திருத்தல்

## செயல் 4


# மகிழ் முற்ற செயற்குழு மாதாந்திர கூட்டம்

**மகிழ் முற்றம் செயற்குழுவில் உள்ளவர்கள் விவரம்**

1. தலைமை ஆசிரியர்
2. குழு ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் (School House Teacher Coordinator)
3. குழுப் பொறுப்பாசிரியர்கள் (House Head Teachers)
4. குழுத் தலைவர்கள் (House Captains)

**மகிழ் முற்றம் செயற் குழு மாதாந்திர கூட்டம்**

- மகிழ் முற்றம் செயற்குழு மாதத்திற்கு ஒரு முறை கூடவேண்டும்
- அனைத்துக் குழுக்கள் பெற்றுள்ள மதிப்பெண்கள் மற்றும் செயல்பாடு முன்னேற்றம், வரவிருக்கும் மாதத்திற்கான செயல்பாடு யோசனைகள் மற்றும் பள்ளியில் மகிழ் முற்றம் குழு அமைப்புச் செயல்படுத்துவதற்கு எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய கலந்துரையாடல் நடைபெற வேண்டும்
- குழுவிலுள்ள ஒவ்வொரு தலைவரின் பொறுப்புகள், பள்ளிகளின் தேவைக்கேற்ப தனிப்பட்ட செயல்பாடுகளில் எந்த அளவுகோல்களின் கீழ் மதிப்பீடு செய்ய வேண்டும் என்பனவற்றை விவாதிக்க வேண்டும்
- குழு அமைப்பு இணையதளத்தில் மகிழ் முற்றம் குழுவில் தேர்ந்தெடுக்கும் தனிச்செயல்பாடுகளைப் பதிவு செய்யவேண்டும். மேலும், ஒவ்வொரு குழுவிற்கும் அவர்களின் பங்களிப்புக்கு ஏற்ப புள்ளிகளையும் பதிவு செய்யவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு மாதமும் அதிகபட்சம் இரண்டு செயல்பாடுகள் மட்டுமே கூடுதலாகச் செய்ய முடியும்.



மகிழ் முற்றம் செயற்குழுவின் முதல் கூட்டமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், இத் திட்டத்தின் நோக்கம், முக்கியத்துவம், குழுவாக இணைந்து செயல்படுவதால் ஏற்படும் நன்மைகள் ஆகியவற்றைக் குழுத் தலைவர் மற்றும் குழுப் பொறுப்பாசிரியர் நன்கு உணர்ந்திருந்தால் மட்டுமே அவர்களின் பங்களிப்பையும் தலைமைத்துவ பண்பையும் மேம்படுத்த முடியும். ஆகவே, இதனை அடிப்படையாகக்கொண்டே முதல் கூட்டம் அமைதல் வேண்டும். இக்கூட்டத்தில் இணைப்பு ஒன்றில் உள்ளபடி அனைவருக்குமான பொறுப்புகளையும் அளித்து விவாதிக்கப்பட வேண்டும்.

## செயல் 5

# மகிழ் முற்றம் பதவியேற்பு விழா



குழுத் தலைவர்களை அந்தந்தக் குழுவின் தலைவர்களாக நியமிப்பதற்கான நிகழ்ச்சியாக இப்பதவியேற்பு விழா நடத்தப்படவேண்டும். இது குழுத் தலைவர்களிடம் பொறுப்பு மற்றும் தலைமைத்துவ உணர்வை ஊட்டும் ஒரு வாய்ப்பாகவும் அமையும். குழுத் தலைவர்களைக் கல்வியாண்டு முழுவதும் தங்கள் கடமைகளை அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் செய்ய உறுதி மொழி எடுக்க வாய்ப்பாகவும் அமையும்.

## மகிழ் முற்றம் குழு அமைப்பு பதவியேற்பு விழா
## மாதிரி நிகழ்ச்சி நிரல்

| வ எண் | நிகழ்வு | பொறுப்பாளர் |
|---|---|---|
| 1 | தமிழ்த்தாய் வாழ்த்து | மாணவர்கள் |
| 2 | வரவேற்புரை | தலைமை ஆசிரியர் |
| 3 | குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் (SHTC ) பதவியேற்பு | தலைமை ஆசிரியர் |
| 4 | குழு அமைப்பு பற்றிய அறிமுகம் | குழு ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் (SHTC ) |
| 5 | மதிப்பீட்டுப் பலகை - திறப்பு விழா | தலைமை விருந்தினர்/ தலைமை ஆசிரியர் |
| 6 | குழுத் தலைவருக்கு கொடி வழங்குதல் | SMC தலைவர் / உறுப்பினர் |
| 7 | குழுத் தலைவர்கள் பதவி ஏற்பு செய்தல் | குழுப் பொறுப்பாசிரியர்(HHT) |
| 8 | குழுத் தலைவர்கள் குழுவாக உறுதிமொழி எடுத்தல் | குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்(SHTC ) |
| 9 | குழுப் பொறுப்பாசிரியர்கள்(HHT) பதவியேற்பு | குழுத் தலைவர்கள் (House Captains) |
| 10 | குழுப் புகைப்படம் எடுத்தல் | |
| 11 | நன்றியுரை | தெரிவு செய்யப்பட்ட குழுத் தலைவர் |
| 12 | நாட்டுப்பண் | மாணவர்கள் |

பதவியேற்பு விழா மற்றும் மாதாந்திர நிகழ்வுகளின் புகைப்படங்கள் மற்றும் தொகுக்கப்பட்ட காணொலியின் Google drive Link-னை House System இணையதளத்தில் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

SCAN ME

## செயல் 6

# மாதந்தோறும் மதிப்பெண் பலகையைப் புதுப்பிக்கும் செயல்முறை



குழு அமைப்பு இணையதளத்தின் வழியாக மாநில அளவில் எடுத்துக் கொள்ளப்பட்ட செயல்பாடுகளுக்கான புள்ளிகளுடன், பள்ளியில் மகிழ் முற்றம் குழு தீர்மானிக்கும் செயல்பாடுகளுக்கும் புள்ளிகள் வழங்கலாம்.

எ.கா. நேரம் தவறாமை (Punctuality), காலை வழிபாட்டுக் கூட்டத்தில் பங்கேற்றல் (Participation in Morning Assembly), வீட்டுப் பாடம் முடித்தல் (Homework Completion), தன் சுத்தம் (Personal Hygiene) போன்ற செயல்பாடுகளுக்கான புள்ளிகள் வகுப்பறையிலும் பள்ளிக்கான மகிழ் முற்றம் மதிப்பெண் பலகையிலும் கூடுதலாக இடம் பெறச் செய்யலாம்.

ஒவ்வொரு வகுப்பறையிலும், அந்தந்த வகுப்பிற்கான மாணவர் குழுக்கள் பெற்ற மதிப்பெண்களை கரும்பலகையிலோ ஒரு வரைப்படத்தாளிலோ காட்சிபடுத்துதல் வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் மாநில அளவு செயல்பாட்டிற்கான இறுதி மதிப்பெண்கள் தாமாகவே இணையதளத்தில் கணக்கிடப்படும்.

மாத இறுதி வாரத்தில், ஒவ்வொரு வகுப்பு ஆசிரியரும் தனிச் செயல்பாடுகளில் தங்களது வகுப்பிலுள்ள குழுக்கள் பெற்றுள்ள மதிப்பெண் விவரத்தை அந்தந்த குழுப் பொறுப்பாசிரியருக்கு தெரிவிக்க வேண்டும்.

குழு அமைப்பு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட செயல்பாடுகளின் அடிப்படையில் குழுக்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண்களை, குழு ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் மதிப்பெண் பலகையில் குறிக்க வேண்டும்.





மாதம்தோறும் வெற்றி பெற்ற குழு (House of the Month) அடுத்த மாதத்தின் முதல் காலை வழிபாட்டுக் கூட்டத்தில் (School Assembly) கௌரவிக்கப்பட்டுப் பாராட்டப்பட வேண்டும். அக்குழுவிற்கான வண்ணக் கொடி பள்ளியில் அனைவரின் பார்வைக்கு மாதம் முழுவதும் காட்சிப்படுத்தப்படல் வேண்டும். மேலும், குழு ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் வருகின்ற மாதத்திற்கு செய்யப்படவேண்டிய செயல்பாடுகளை அறிவிக்க வேண்டும்.

பள்ளிக் கல்வித் துறை
தமிழ்நாடு அரசு

## மகிழ் முற்றம் மதிப்பெண் பலகை

| பள்ளியின் பெயர் | பள்ளித் தலைமை ஆசிரியர் பெயர் |
|---|---|
| மாதம், வருடம் | முன்னணியிலிருக்கும் குழு - |

| செயல்பாடு | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| வருகை | | | | | |
| கற்றல் திறன் | | | | | |
| மன்றங்கள் | | | | | |
| கலைத் திருவிழா | | | | | |
| மொத்த மதிப்பெண் | | | | | |

மாதிரி மதிப்பெண் பலகை

## முடிவுரை

பள்ளிகளில் மகிழ் முற்றம் குழு அமைப்பைச் செயல்படுத்துவது என்பது, பள்ளிக்கல்வியின் மூலம் மாணவர்களிடையே குழுப்பண்புகளையும், தனித்திறன்களின் விரும்பத்தக்க மாற்றத்தை நோக்கிய பயணத்தின் தொடக்கமாகும். மாணவர்களிடத்தில் ஒருமைப்பாட்டு உணர்வை வளர்த்தல், கற்றலில் ஆர்வத்தைத் தூண்டுதல், சுய ஒழுக்கத்தை மேம்படுத்துதல், குழுவாக இணைந்து இயங்குதல், தலைமைப் பண்பிலும் நேர மேலாண்மையிலும் சிறப்படைதல் என மாணவர்களின் முழுமையான வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துதலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தலைமையாசிரியர் மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர் ஆகியோரின் பங்கு மிகவும் முக்கியமானது.

இக்கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் இந்தத் திட்டம் குறித்து


- மாணவர்களுக்கு முழுமையான புரிதலை ஏற்படுத்துதல்,
- மதிப்பீட்டு முடிவுகளை மதிப்பெண் பலகையில் ஒவ்வொரு மாதமும் புதுப்பித்தல்,
- ஒவ்வொரு மாதமும் குழுக் கூட்டங்கள் நடத்தி இடர்பாடுகளுக்கு தீர்வு காணுதல், புதிய திட்டங்களை வகுத்தல்.

ஆகியவற்றைக் செயற்படுத்துவது தலைமையாசிரியர் மற்றும் குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் ஆகியோரின் பொறுப்பாகிறது. மகிழ் முற்றம் குழு அமைப்பை நமது மாணாக்கர்களுக்கான சிறந்த கல்விப் பயணத்தின் மைல்கல்லாக மாற்றுவோம்!

# இணைப்புகள்

# இணைப்பு - 1 பங்கு மற்றும் பொறுப்புகள்

**தலைமை ஆசிரியர்:**



**மகிழ் முற்றம் குழு (HOUSE SYSTEM) அமைத்தல்**

- House System இணையதளத்தில் கொடுக்கப்பட்ட Set House பொத்தானை அழுத்தி மகிழ் முற்றம் குழுக்களை உருவாக்குதல்.
- மகிழ் முற்றம் குழு அமைப்பு பற்றி, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு விளக்குதல்.
- குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் மற்றும் குழுப் பொறுப்பாசிரியர்களைத் தெரிவு செய்தல்.
- ஒவ்வொரு குழுவிற்கும் பள்ளி அளவில் இரண்டு குழுத் தலைவர்கள் மற்றும் வகுப்பாசிரியர்கள் மூலம் வகுப்பு குழுத் தலைவர்களைத் தெரிவு செய்தல்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட குழுப் பொறுப்பாசிரியர்கள் மற்றும் குழுத் தலைவர்களுடன் முதல் ஆலோசனைக் கூட்டத்தை நடத்துதல்.
- மகிழ் முற்றம் பதவியேற்பு விழா நடத்துதல்.
- குழு ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர், குழுப் பொறுப்பாசிரியர் மற்றும் குழுத் தலைவர்களின் பெயர்களை குழு அமைப்பு இணையதளத்தில் பதிவு செய்தல்.

## குழு அமைப்பைச் சிறப்பாகச் செயல்படுத்துதல்

- குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் (SHTC) மாதந்தோறும் மதிப்பெண் பலகை புதுப்பிப்பதை உறுதிசெய்தல்.

- பள்ளியில் நடத்தப்படுகின்ற ஆசிரியர் கூட்டத்தில் மகிழ் முற்றம் செயற்குழு உறுப்பினர்களை அழைத்து, குழுக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள், செயல்பாடுகள், மற்றும் முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடுதல்.


- மாதத்தின் முதல் வேலை நாளில் கடந்த மாதத்தில் வெற்றி பெற்ற குழுவினை அறிவித்து, அக்குழுவின் கொடியேற்றல் மற்றும் அம்மாதத்திற்கான செயல்பாடுகளை அறிவித்தல்.

- பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படும் தகவல்களை குழுப் பொறுப்பாசிரியர்களுக்கும் குழுத் தலைவர்களுக்கும் தெரிவித்தல்.

- பள்ளியின் சிறந்த குழு செயல்பாடுகளை மாவட்ட அலுவலர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்.

- குழு அமைப்பு தொடர்பான பள்ளிச் செயல்பாடுகளில் SMC உறுப்பினர்கள் பங்கேற்பதை உறுதி செய்தல்.

- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தனித்துவமான முயற்சிகளைப் பாராட்டுதல் மற்றும் அங்கீகரித்தல்.



## குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் (School House Teacher Coordinator)

- மாதத்தின் கடைசி வேலை நாளில் ஒவ்வொரு குழுவின் புதுப்பிக்கப்பட்ட மதிப்பெண்களைப் பள்ளியின் மதிப்பெண் பலகையில் பதிவு செய்தல்.

- மாதத்திற்கு ஒரு முறை நடக்கின்ற மகிழ் முற்றம் செயற்குழு கூட்டத்தில் மாணவர்களுடன் இணைந்து குழுக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள், செயல்பாடுகள், ஆலோசனைகள் மற்றும் அதன் முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடுதல்.

- குழுப் பொறுப்பாசிரியர்கள் மற்றும் குழுத் தலைவர்களுடன் அவ்வப்போது தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துகளைப் பெறுதல்.

- பள்ளியின் சிறந்த மகிழ் முற்றம் செயல்பாடுகளை தலைமையாசிரியரிடம் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் ஆவணப்படுத்தல்.

- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இடையே மகிழ் முற்றம் குழுவின் நோக்கத்தை வலியுறுத்துதல்.

- பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படும் தகவல்களை குழுப் பொறுப்பாசிரியர்களுக்கு தெரிவித்தல்.

- குழுப் பொறுப்பாசிரியர்கள் மற்றும் குழுத் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட, மகிழ் முற்றம் சார்ந்த மதிப்பெண்கள் மற்றும் தகவல்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்தல்.



## குழுப் பொறுப்பாசிரியர் (House Head Teachers):

- தங்கள் குழுத் தலைவர்களுக்கு, செயல்பாடுகளில் பங்கேற்கவும், திறன்களை வளர்க்கவும், அவற்றை முறையாக வெளிப்படுத்தவும் வழிகாட்டுதல் அளித்தல்.


- அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்புகளை வழங்குவதற்காக மாணவர்களின் பங்கேற்பை அதிகரிக்க ஊக்குவித்தல்.

- தங்கள் குழுவில் எழக்கூடிய இடர்பாடுகளுக்கு தீர்வு காண்பதில் குழுத் தலைவர்களுக்கு உதவுதல்

- குழு செயல்பாடுகளின் தனித்துவமும் முறையான செயல்பாட்டையும் உறுதி செய்வதற்காக குழுத் தலைவர்களை ஊக்குவித்தல்.

- தங்கள் குழுவின் சிறந்த செயல்பாடுகளை குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளருடன் பகிர்ந்து கொள்ளுதல்.

- பள்ளிக் கல்வித்த துறையால் வழங்கப்படும் தகவல்களைக் குழுத் தலைவவர்களுக்கு தெரிவித்து நடைமுறைப்படுத்துதல் .



**வகுப்பாசிரியர் (Class Teachers):**

- மாணவர்களின் திறமைகளை அடையாளம் கண்டு, குழு செயல்பாடுகளில் அவர்களின் பங்களிப்பை ஊக்குவித்தல்.

- அனைத்துச் செயல்பாடுகளையும் பங்கேற்பினையும் குழு அமைப்பிற்கான இணையதளத்தில் பதிவு செய்யப்படுவதை உறுதிசெய்தல்.

- இணையதள முகப்பிலுள்ள முன்னேற்றபலகையின் அடிப்படையில் வகுப்பறையில் அமைந்துள்ள விளக்க அட்டையில் அல்லது கரும்பலகையில் மதிப்பெண்களை குறிப்பிடுதல்.

- பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படும் தகவல்களை ஒவ்வொரு வகுப்பறையிலும் உள்ள குழுத் தலைவர்களுக்கு தெரிவித்தல்.


- பள்ளியளவில் நடைபெறும் மகிழ் முற்றம் சார்ந்து ஆசிரியர் கூட்டத்தில் வகுப்பு குழு தலைவர்கள் மற்றும் மாணவர்களின் சிறப்பான செயல்பாடுகள், பெற்ற வெற்றிகள் மற்றும் இடர்பாடுகள் குறித்து கலந்துரையாடுதல்.



**குழுத் தலைவர் (House Captains):**

- குழு நிகழ்வுகளில் பங்கேற்க தம் குழுவின் அனைத்து மாணவர்களையும் ஊக்குவித்தல்.

- எவையேனும் இடர்பாடுகள் இருப்பின், அதனை குழுப் பொறுப்பாசிரியரிடம் (HHT) தெரிவித்து தீர்வினைப் பெறுதல்.




- தங்கள் குழுவின் சிறந்த செயல்பாடுகளை குழுப் பொறுப்பாசிரியருடன் பகிர்ந்து கொள்ளுதல்.

- மகிழ் முற்றம் செயற்குழு கூட்டத்தில் குழுக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள், செயல்பாடுகள், ஆலோசனைகள் மற்றும் அதன் முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடுதல்

- தங்கள் குழுவிலுள்ள அனைவரையும் உள்ளடக்கிய தன்மை, சமூக உணர்வு மற்றும் தோழமை ஆகியவற்றை உறுதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

- நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளைத் திட்டமிடுவதற்காகப் பிற குழுத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் .

- நன்றாக செயல்படும் வகுப்புக் குழுத் தலைவர்கள் மற்றும் குழு உறுப்பினர்களைக் கண்டறிந்து, கூட்டங்களில் அவர்களைப் பாராட்டுதல்.



## வகுப்புக் குழுத் தலைவர் (House Class Leaders):

- குழு மாணவர்கள் அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்பதை உறுதிசெய்து, குழுவின் மதிப்பெண்ணை மேம்படுத்த ஊக்குவித்தல்.

- எவையேனும் இடர்பாடுகள் எழுந்தால் அவற்றிற்குத் தீர்வு காண குழுப் பொறுப்பாசிரியர் மற்றும் குழுத் தலைவர் ஆகியோருடன் சேர்ந்து பணியாற்றுதல்.

- பள்ளியளவில்/ வகுப்பளவில் நடைபெறும் மகிழ் முற்றம் கூட்டத்தில் பெற்ற வெற்றிகள், இடர்பாடுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடுதல்.

- தங்கள் வகுப்புக் குழுவின் சிறந்த செயல்பாடுகளை குழுத் தலைவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்.

# மகிழ் முற்றம் - கையேடு உருவாக்கக் குழு

**ஒருங்கிணைப்பாளர்கள்:**

மருத்துவர். ம. ஆர்த்தி, இ.ஆ.ப.,
மாநில திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

முனைவர். ச. கண்ணப்பன், இயக்குநர்,
பள்ளிக் கல்வி இயக்ககம்

திருமதி. க. சசிகலா, இணை இயக்குநர்,
நாட்டு நலப்பணித் திட்டம்

முனைவர் வை. குமார், இணை இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

திருமதி. செ. அமுதவல்லி, இணை இயக்குநர் (பயிற்சி),
மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

திருமதி. ரேகா, மாநில ஒருங்கிணைப்பாளர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

**ஓவியர் மற்றும் கையேடு வடிவமைப்பாளர்கள்:**

திரு. இரா. கோபிநாத், இடைநிலை ஆசிரியர்,
ஊ.ஒ. ந. நி. பள்ளி, இராஜாக்குப்பம்,
குடியாத்தம், வேலூர்

திருமதி. ப்ரீத்தி கோவிந்தராஜன்,
வித்யா விதை

திரு. கேசவ் குமார்,
வித்யா விதை

**பங்களிப்பாளர்கள்:**

திரு. த.விஜயகுமார், தலைமை ஆசிரியர், அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, முகப்பேர் (கிழக்கு), சென்னை - 37

திருமதி. பா. நிர்மலா தேவி - பட்டதாரி ஆசிரியர்,
நகரவை உயர்நிலைப்பள்ளி, நொய்யல் வீதி, திருப்பூர்

திருமதி. அர்ச்சனா ஹரி

செல்வி. வித்யா மீனாம்பாள்,
வித்யா விதை

திரு. நா. நாகராஜ்,
வித்யா விதை

# பள்ளிக் கல்வித் துறை

## மாற்றத்தை நோக்கிய பயணத்திற்கு மனமார்ந்த வாழ்த்துகள்